# கிட்டண்ணா

# பன்முகப்பட்ட ஆளுமையின் கூட்டு வடிவம்


— கஸ்ரோ —

"கிட்டண்ணா வெளிநாட்டில் இருந்தாலும் அவரது மனம், எண்ணங்கள், சிந்தனைகள் எல்லாமே தமிழீழத்தைப் பற்றியதாகவே அமைந்தது. தமிழீழத்தி



லுள்ள வளங்கள், கலை பண்பாடுகள், அரசியல் செயற்பாடுகள், சமூகப்பணிகள், இராணுவ கட்டமைப்புக்கள், பயிற்சி முறைகள், புகைப்படக்கலை போன்ற பல துறைகளைப்பற்றிய தனது எண்ணங்களை, அநுபவ ரீதியாக தான் பெற்றுக்கொண்டவற்றை, அறிபூர்வமாக தான் அறிந்தவற்றை விளக்கமாக, சிறு சிறு குறிப்புகளாகப் பல மடல்களை எழுதினார். தலைவரைப் பற்றி அவர் பூரணமாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார்."

ஒருமுறை இலண்டனில் இருந்து வெளியாகும் "களத்தில்" பத்திரிகையினை தலைவருக்கு காட்டியபோது "இது கிட்டுதான் செய்யிறான் போல கிடக்கு. இல்லாட்டி இப்படி வராது. வேணுமெண்டால் விசாரிச்சுப்பார்" என்று கூறினார். ஏனென்றால் அது அவ்வளவு தரமாக இருந்தது. அதனது ஒவ்வொரு பக்கமும் நுணுக்கமாக திட்டமிடப்பட்டு படங்கள், கட்டுரை, கவிதைகள் போன்றன உரிய இடங்களில் போடப்பட்டு, மெருகூட்டப்பட்டு இருந்தது. நிச்சயமாக கிட்டண்ணைதான் இதற்குப் பின்னால் இருக்கிறார் என்று தெரிந்தாலும், வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவர் மூலம் இதனை உறுதிப்படுத்திக் கொண்டேன்.



சிகிச்சைக்காக கிட்டண்ணா இந்தியாவிற்கு சென்ற போது கூட அவரால் வெறுமனே கையைக் கட்டிக் கொண்டு இருக்க முடியவில்லை. இந்திய இராணுவம் தமிழீழத்தில் புரிந்த கொடுமைகளை நூல் வடிவில் அம்பலப்படுத்திக் கொண்டிருந்தார். இந்நூல்கள் அச்சடிப்பது தொடர்பான வேலைகளை ஒரு போராளியிடம் ஒப்படைத்திருந்தார். ஒவ்வொரு நாளும் அந்தப் போராளியிடம் நூல்கள் எந்த நிலையில் உள்ளது என்பதைக் கவனமாக கேட்டறிவார். அத்துடன் அச்சடித்த பக்கங்களைப் பார்த்து அதிலுள்ள பிழை திருத்தங்களைக் கூறுவார். ஒரு முறை நான் கிட்டண்ணாவின் இடத்துக்குப் போன போது அந்தப் போராளிக்கு கடும் பேச்சு விழுந்து கொண்டிருந்தது "தெரியாமல் இதுக்குள்ளே போய் மாட்டுப் பட்டு விட்டன்" என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே " இவன் பிறசை (Press) பற்றி எனக்கு சொல்லுறான் " என்றார் என்னைப்பார்த்தபடியே. கிட்டண்ணா நூல் ஒன்றை குறிப்பிட்ட திகதிக்குள் அச்சடித்து முடிக்க வேண்டும் என்று அந்த போராளியிடம் கூறியிருந்தார். குறிப்பிட்ட திகதிக்கு அச்சடிக்க முடியாமல் போனதால் ஏதோ வியாக்கியானங்களை அந்தப் போராளி கிட்டண்ணாவிற்குச் சொல்லிக்கொண்டிருந்தான். கிட்டண்ணாவிற்கு அச்சடிக்கும் தொழில் மாத்திரமல்ல எந்தவொரு விடயத்திலும் பிழையான காரணம் கூறித் தப்பமுடியாது என்று எனக்கு நன்கு தெரிந்திருந்தது " விசயம் விளங்காமல் கதைக்கிறான் மடையன் " என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே அந்தப் போராளியை அழைத்து அவன் சொன்ன வியாக்கியானங்களுக்கு சரியான விளக்கங்கள் கூறிவிட்டு " நாளைக்கிடையிலே அடிச்சுக் கொண்டு வாறாய் " என்று அவனை அனுப்பினார்.

" நீ கடைசியாக வந்த இந்தியாருடே (India Today) யினைப் பார்த்தனியோ ? " என்று என்னைக் கேட்டார். எதனை மனதில் வைத்துக் கொண்டு கேட்கிறார் என்று தெரியவில்லை. 'பிடிபடப்போகிறேனே' என நினைத்துக் கொண்டே " ஓம் " என்றேன். குறிப்பிட்ட விளம்பரம் ஒன்றின் பெயரைக்கூறி " அதைப் பார்த்தியா " என்று கேட்டார். எனது விழி பிதுங்கலாயிற்று. அடுத்த கட்டமாக என்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. " இங்கே வா " என்று தனது மேசைக்கு அழைத்துச் சென்றார். அவரது மேசையிலிருந்த இந்தியாருடே (India Today) இலெஸ்ரேட்டற் வீக்லி ஒவ் இந்தியா (ILLustrated Weekly Of India) போன்ற பல சஞ்சிகைகளில் உள்ள விளம்பரங்களைக் காட்டினார். " இதை ஏன் உனக்கு காட்டுறன் தெரியுமோ?" என்று கேட்டார். என்னால் பதில் சொல்ல முடியவில்லை. "நான் புத்தகங்கள் எடுத்தால் முதல்பார்க்கிறது விளம்பரம் தான் " என்றார். " அதில் தான் ராப்பா விசயம் இருக்கு" என்று கூறி முடித்தார். பின்பு எனது பதிலை எதிர்பாராமலே விளம்பரங்கள் எப்படி மக்களை கவர்ந்திழுக்கக் கூடிய வண்ணம் தயாரிக்கப்படுகின்றன என்றும், விளம்பரங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு அதன் நோக்கத்தை வெளிப்படுத்தும் வண்ணம் மிகவும் கவனமாக திட்டமிடப்பட்டு தயாரிக்கப்படுகின்றன என்றும், அதில் போடப்படும் படங்கள் வர்ண அமைப்புகள், நிறங்களின் பொருத்தமான தன்மை, அந்தப் பொருளை வாங்குவதற்கு கவரக் கூடிய அமைப்பு என்பனபற்றி நீண்ட நேரமாக விளங்கப்படுத்தினார். விளம்பரங்கள் தயாரிப்பதற்கு என்றும் (Lay Out), செய்வதற்கு என்றும் விசேடமாக படித்த தொழில் வல்லுனர்கள் உள்ளனர் என்றும் இதற்காக தொழில் நிறுவனங்கள் உள்ளன என்றும் அதனைப் பற்றியும் விளக்கமளித்தார்.

"இதை ஏன் உனக்கு சொல்லுறன் தெரியுமோ? " என்று என்னைப் பார்த்து கேட்டார். உண்மையாக எனக்கு அப்போது ஒன்றும் விளங்கியிருக்கவில்லை. "எங்கட வெளியீடுகளையும் நாங்கள் செய்யேக்குள்ளே இதே போலக் கஸ்ரப்பட்டு செய்ய வேணும். "அதைப்பார்க்கிறவர்களுக்கு வாசிக்க தூண்டோணுமடாப்பா" என்றார் கிட்டண்ணை. இப்போதுதான் எனக்கு விளங்கியது. அப்போது கிட்டண்ணா இந்திய இராணுவத்தினது அட்டூழியங்களை வெளிப்படுத்தும்வகையில் ஏராளமான பிரசுரங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தார். இவை எல்லாவற்றையும் இந்தியாவிலும் வெளிநாட்டிலுமுள்ள தூதராலயங்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள், பத்திரிகைகள், அரசியல் கட்சி பிரமுகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முக்கியமானவர்கள் என எல்லோருக்கும் தொடர்ச்சியாக அனுப்பிக் கொண்டிருந்தோம். இவர்களில் எத்தனை பேர் எங்களுடைய பிரசுரங்களைப் பார்த்திருப்பார்கள்? இவர்கள் எல்லோரும் பார்க்கத் தூண்டும் வகையில் எமது பிரசுரங்களைத் தயாரிக்க வேண்டும். கிட்டண்ணா இதனை மனதில் வைத்துத் தான் செயற்பட்டார். இரவு பகலாக யோசித்தார். பலரை அழைத்து அபிப்பிராயம், ஆலோசனை கேட்டார். அவரது கடினமான உழைப்பின் பயனாக 'தமிழீழம்' 'பவான் பேப்பர்ஸ்' (P-awan Papers, You to India) தியாகி திலீபன், கப்டன்லாலா ரஞ்சன் போன்ற பிரசுரங்கள் வெளிவந்தன. இவற்றில் தமிழீழம் 7 வெளியீடுகளும், பவான் பேப்பர்ஸ் 20 வெளியீடுகளும் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த வெளியீடுகள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ஜனநாயகம், அகிம்சை என்ற இந்தியாவின் போலி முகத்திரைகளை இந்த நூல்கள் கிழித்தெறிந்தன. இந்தியாவின் சுயரூபத்தை அம்பலமாக்கின.

கிட்டண்ணா விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களிற்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட பின்பு வெளிநாடுகளிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. லண்டனிலிருந்து மாதமிருமுறை "களத்தில்" எனும் பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. பிரான்சிலிருந்து இதுவரை காலமும் நிழற்பட பிரதியில் வெளிவந்த 'எரிமலை' எனும் மாதாந்த சஞ்சிகை அச்சுக்கூடத்தில் ஏறி பல வர்ணங்களுடன், புதுமெருகுடன் "கலை பண்பாட்டு சமூக அரசியல் ஏடாக" உலாவரத் தொடங்கியது. மாதமிருமுறை கனடாவிலிருந்து வெளியாகும் "உலகத் தமிழர்" எனும் பத்திரிகையும், நோர்வையிலிருந்து வருடத்திற்கு மும்முறை வெளிவரும் "சுதந்திர தாகம்" எனும் சஞ்சிகையும் கிட்டண்ணா பொறுப்பெடுத்த பின்பு

தொடர்ச்சி 10ம் பக்கம் ....